**செய்தி வெளியீடு எண்: 18/2022** **நாள்: 08.03.2022**

## பத்திரிக்கை செய்தி

## மெட்ரோ இரயில் நிலையங்களில் வேதியியல் ஊறுவிளைவிக்காத கிருமிநாசினி

மெட்ரோ இரயில் நிலையங்களில் நுண்ணிய நிறமற்ற திரவ வடிவிலான வேதியியல் ஊறுவிளைவிக்காத கிருமிநாசினி (COSMO) அமைப்பை நிறுவிய இந்தியாவின் முதல் மெட்ரோ இரயில் என்ற பெருமையை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பெற்றுள்ளது. இந்த நுண்ணிய நிறமற்ற திரவ வடிவிலான வேதியியல் ஊறுவிளைவிக்காத கிருமிநாசினி (COSMO) மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் காற்று மற்றும் மேற்பரப்புகளில் உள்ள கிருமிகளை முழுமையாக சுத்தம் செய்கிறது. இந்த கிருமிநாசினி அமைப்பு, காற்று மற்றும் மேற்பரப்பில் உள்ள வைரஸ், பாக்டீரியா, நச்சுகள் போன்றவற்றை அழிக்க உதவுகிறது.

நுண்ணிய நிறமற்ற திரவ வடிவிலான வேதியியல் ஊறுவிளைவிக்காத கிருமிநாசினியை தண்ணீரில் முறையாக கலந்து, மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள காற்றோட்ட அமைப்பு மூலம் காற்றில் உள்ள கிருமிகள் சுத்தம் செய்யப்படுகிறது. இந்த தொழில்நுட்பத்தின் முக்கிய நன்மை, குழாய் தண்ணீரை பயன்படுத்துவது. இந்த கிருமிநாசினி சுற்றுப்புறப்பகுதிகளிலும் காற்றின் மூலம் கிருமிகள் மற்றும் வேதி பரவலை தடுக்கிறது. இது மிகவும் தூய்மையான, பாதுகாப்பான, நீடித்த கிருமிநாசினி முறையாகும். காற்று, நீர் மற்றும் சுற்றுச்சூழலில் உள்ள புதிய அசுத்தங்களை எதிர்த்து 99%-க்கும் அதிகமாக கிருமிகளை அழிக்கும் இந்த தொழில்நுட்பம் இதுவரை அதிநவீன மருத்துவமனைகள் மற்றும் சுகாதார அமைப்புகளில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சுரங்கப்பாதை மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள காற்றோட்ட அமைப்பு மூலம் இந்த கிருமிநாசினி முறையை பயன்படுத்துகிறது. இது பாக்டீரியா, பூஞ்சை, வைரஸ்கள், புரோட்டோசோவா போன்ற நுண்ணுயிர்களை 99%-க்கும் அதிகமாக அழிக்கிறது. வாயு-நிலை ஆக்ஸிஜனேற்ற கிருமிநாசினி மூலம் மேற்பரப்பை சுத்தம் செய்து மெட்ரோ இரயில் நிலையங்களில் சுத்தமான மேற்பரப்புகளை உறுதி செய்கிறது.

இந்த அமைப்பின் முதுகெலும்பாக இருக்கும் மைக்ரோ-டிஸ்சார்ஜ் பிளாஸ்மா டெக்னாலஜி, அமெரிக்காவின் தேசிய அறிவியல் அறக்கட்டளையால் சரிபார்க்கப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளது, மேலும் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் ஆதரிக்கப்பட்டுள்ளது.

இந்த புதுமையான கிருமிநாசினி செயல்முறை மனிதர்களுக்கு பாதுகாப்பானது மற்றும் பாதிப்பில்லாதது, ஆனால் வைரஸ்கள் மற்றும் பாக்டீரியாக்களை கொல்லும் திறன் கொண்டது.

மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களின் வெளிப்புறம், உட்புறம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் கிருமி நீக்கம் செய்யப்பட்டு, பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உறுதி செய்கிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**